22nd July 1964]

சாத்தியமிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்வதற்குப் பொதுப் பணித்துறை அமைச்சரிடம் தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

பக்கிங்காம் கால்வாய்

*631 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து பின்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பக்கிங்காம் கால்வாயில் படகு போக்குவரத்துக்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

கனம் திரு. வெ. ராமையா: சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டிருக்கிறது.

A paper[a] is placed on the table of the House.

திரு. ஆ. கு. சுப்பையா: சார், இந்த தூர் வாரி இயந்திரங்கள் அரசாங்கப்பட்டறையில் வேலை நடக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது எப்பொழுது முடியும். அது எப்பொழுது வேலை செய்ய ஆரம்பிக்கும் என்பதை அறியலாமா?

கனம் திரு. வெ. ராமையா: மெஷின் வந்து விட்டது. எப்பொழுது முடியும் என்று திட்டவட்டமாகச் சொல்லுவதற்கில்லை.

நெடுஞ்சாலைத் துறை

*632 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து பின்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நெடுஞ்சாலை (Highways) துறையில் பத்து, பதினைந்து ஆண்டுகளாகப் பணிபுரியும் ரோடுரோலர் டிரைவர்களை பர்மனென்ட் செய்யாததன் காரணமென்ன?

THE HON. SRI V. RAMAIAH: The Government issued orders provincialising 1,110 posts of workers in the non-provincialised work charged Establishment of the Highways and Rural Works Department. According to this, the strength of Road Roller drivers has been fixed as 148 permanent posts and 74 temporary posts. The services of temporary drivers will be made permanent according to their seniority as and when vacancies occur in the 148 permanent sanctioned posts. The redistribution of the posts for the various circles had to be examined by the Chief Engineer (Highways and Rural Works) in consultation with the Superintending Engineer and the Director, Highways Research Station. The Chief Engineer has since issued final orders. Now the Superintending Engineers have called for the Service Registers and Service

a 656–657-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[22nd July 1964

Rolls of the personnel to decide seniority, etc., to enable them to issue orders. Necessary instructions have been issued to the Superintending Engineer and the Director, Highways Research Station to finalise scrutiny and issue early orders.

அரிசன காலனிக்காக வீட்டு மனை (திண்டுக்கல் தாலுகா).

*635 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திண்டுக்கல் தாலுகா பாளையம், மதுரா, பள்ளப்பட்டி கிராமங்களில் அரிசன காலனிக்காக வீட்டு மனை ஆர்ஜிதம் செய்ய உத்தேசமுண்டா ?

(இ) அந்தக் கிராமத்தில் எத்தனை தாழ்த்தப்பட்ட குடும் பங்கள் இருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம். திண்டுக்கல் தாலுகாவைச் சேர்ந்த பாளையம் கிராமத்தில் குக்கிராமமாகிய பள்ளப்பட்டி யிலுள்ள ஹரிஜனங்களுக்காக வீட்டு மனைகளை ஆர்ஜிதம் செய் வதற்கு கலெக்டரிடமிருந்து வேலைத் திட்டம் எதிர்பார்க்கப்படு கிறது.

(இ) மேற்படி கிராமத்தில் சுமார் 100 ஹரிஜனங்கள் வசிக் கின்றனர்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், பள்ளப்பட்டி கிராமத்தி லிருக்கும் நத்தமே மேலும் ஒரு 100 குடிகளுக்கு அஸைன் செய் யும் அளவுக்கு நிலம் இருந்தும், சாதி இந்துக்கள் பள்ளர்களை விலக்க வேண்டும், பள்ளர்கள் தனியாக வசிக்க வேண்டும் என்ற காரணத்தினால், ஒரு சேரியை உற்பத்தி பண்ண வேண்டும் என்று அரசாங்கத்தை இந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள் என்பது உண்மையா ? இதில் அரசாங் கம் நல்ல நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் சொல்வது எப்படி என்று தெரியவில்லை. நான் அந்த ஜில்லாவாசி. விவரம் எப்படி வந்தது என்று தெரியவில்லை. ஏற்கனவே அரிஜனங்களுக்கு ஒரு இடம் பார்த்து இருந்தார்கள். எப்படியோ அந்த நிலத்தை கிருஷ்ணசாமி சேர்வை என்பவர் அஸைன்மெண்ட் வாங்கி விட்டார் கள். அவர் அந்தஸ்து உள்ளவர்தான், பாகப்பிரிவினையின்போது அவருடைய அண்ணாச்சி பணக்காரராகவும், இவர் ஏழையாகவும் ஆகிவிட்டார். அதனால் இதை அவருக்குக் கொடுக்கலாம் என்று கொடுத்து விட்டார்கள். ஆனாலும் இப்பொழுது அதே இடத்தை அரிஜனங்களுக்காக அக்வயர் பண்ண ஏற்பாடு செய்திருக்கிறோம். ஏதோ அரிஜனங்களுக்குக் கஷ்டம் கொடுக்க வேண்டும் என்று செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.